பக்கங்கள்:-19

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2056 | மாசி 03 | சனிக்கிழமை | 15.02.2025 | அதிர்வு 197

## இன்று யாழ்ப்பாணம் வருகின்றார் பிரதமர்

### நாளை வன்னிக்கு விஜயம்



பிரதமர்ஹறிணிஅமர சூரிய யாழ்ப்பாணத்துக்கு இன்று சனிக்கிழமை வருகை தரவுள்ளார்.

இன்று காலை 05▶

# அநுர அரசின் வாக்குறுதிகள் நிறைவேற வேண்டும் என்று மக்கள் ஆவலுடன் எதிர்பார்ப்பு

## வடக்கு ஆளுநருடனான சந்திப்பின்போது கனேடியத் தூதுவர் எரிக் வோல்ஷ் தெரிவிப்பு



(எஸ்.நிதர்ஷன்)

“தற்போதைய அரசின் வரவு - செலவுத் திட்டம் தொடர்பில் பலத்த எதிர்பார்ப்பு நிலவுகின்றது. அரசு கூறிய விடயங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் மக்கள் ஆவலாக இருக்கின்றமையை நான் சந்தித்த சிவில் சமூகக் குழுக்களிடமிருந்து அறியக் கூடியதாக இருந்தது.”

- இவ்வாறு இலங்கைக்கான கனேடியத் தூதுவர் எரிக் வோல்ஷ் தெரிவித்தார். 06▶

# இனியும் குரங்குகள் மீது பழி போடாதீர் மின் துண்டிப்பு தொடர்ந்து நடக்குமா?

## அரசிடம் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் கேள்வி

“நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர்என்றவகையில்கருத்துத்தெரிவிக்கசந்தர்ப்பம் தர வேண்டும். மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கான பதில்களை நாடே எதிர்ப்பார்த்துக் கொண்டிருக்கின்றது. மின் துண்டிப்பு தொடர்ந்து நடக்குமா? அரசியல் பழி வாங்கல்கள் தொடர்ந்தும் முன்னெடுக்கப் படுமா? போன்ற பிரச்சினைகளுக்கு பதில் வழங்கப்பட வேண்டும்.”

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்தில் உரையாற்றும்போது தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

“இந்த மின் துண்டிப்பு குறித்து இந்தச் சபையில் அமைச்சர் விளக்கம் 06▶



# இனி தடையின்றி மின் விநியோகம்!

## மின்சக்தி அமைச்சு அறிவிப்பு



நாட்டில் இனிமேல் மின் விநியோகத் தடை அமுல்படுத்தப்படாது என்று மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு நேற்று 06▶

## நாமலின் சட்டப் பட்டம் குறித்து சி.ஐ.டியின் விசாரணை ஆரம்பம்



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின்நாடாளுமன்றஉறுப்பினர் நாமல் ராஜபக்ஷ சட்டக் கல்லூரிப் பரீட்சைக்குச் சட்ட விரோதமான முறையில் தோற்றினார் என்று தெரிவித்து இலஞ்ச, ஊழல் வீண்விரயத்துக்கு எதிரான குடிமக்கள் அதிகாரம் என்ற 05▶




இன்று நீதிமன்றச் செய்தி ஒன்று பற்றிய தகவலைப் பரிமாறலாம் என நினைக்கிறேன்.

இது, 2019 ஜனாதிபதி தேர்தல் சமயம் வெளியான ஒரு செய்தி தொடர்பாக மூன்று தென்னிலங்கை நாளிதழ்கள் வசமாக மாட்டிக் கொண்ட விவகாரம்.

அப்போது கோட்டாபய ராஜபக்ஷவை எதிர்த்து சஜித் பிரேமதாஸ தேர்தல் களத்தில் நின்றார். கோட்டாபய ராஜபக்ஷவின் வெற்றியை உறுதிப்படுத்துவதற்காக மூன்று பத்திரிகைகள் தேர்தலுக்கு ஓரிரு நாள்கள் இருக்கையில் – கடைசி நேரத்தில் – ஒரே மாதிரி ஒரு குசும்புச் செய்தியை தாங்களே சமைத்து – இட்டுக் கட்டி – வெளியிட்டன.

மாங்குளத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரான சுமந்திரன் பேசியவை என்று தெரிவித்து ஒரு விடயத்தை மூன்று பத்திரிகைகளும் தலைப்புச் செய்தியாக வெளியிட்டு இருந்தன.

அந்தச் சமயத்தில் சஜித் பிரேமதாஸவை 06▶

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம் - Bonding Tamils Globally






# மூத்த ஊடகர் பாரதியின் மறைவு தமிழ்த் தேசியத்துக்குப் பேரிழப்பே

## தமிழரசுக் கட்சியின் எம்.பி. சிறீதரன் இரங்கல்

"மூத்த ஊடகவியலாளர் இராஜநாயகம் பாரதியின் மறைவு, ஊடகத்துறைக்கும் தமிழ்த் தேசியத்துக்கும் ஆகப் பெரிய இழப்பு என்பதில் மறுகருத்தில்லை. ஏனெனில், ஈழத்துத் தமிழ்ப் பத்திரிகைத் துறையில் ஒப்பாரும், மிக்காரும் இல்லாது பணியாற்றிய வெகுசில ஊடகவியலாளர்களில் பாரதி என்றும் தனித்துவமானவர்."

– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் சிவஞானம் சிறீதரன் எம்.பி. தெரிவித்தார்.

மூத்த ஊடகவியலாளர் பாரதியின் மறைவு தொடர்பில் சிறீதரன் எம்.பி வெளியிட்டுள்ள இரங்கல் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

"ஊடக அறம், ஊடக ஒழுக்கம், தற்துணிவு, தன்மானம் மற்றும் விடாமுயற்சி ஆகிய பண்புகளை ஒருமித்தும் ஒன்றிணைத்தும் கொண்டிருந்த ஒரு பெருந்தகையே மூத்த ஊடகவியலாளர் பாரதி என்றால் அது மிகையாகாது.

கொழும்பில் பணியாற்றுவதற்காகச் சென்ற ஊடகவியலாளர்கள் பலர், தேசிய நீரோட்டத்தில் "தொழில்முறையாக" சங்கமித்து, தமிழ்த் தேசியத்தை விட்டு வெகுதூரம் சென்ற பதிவுகள் எம்மத்தியில் தாராளமாக உள்ளன. ஆனால், ஊடகவியலாளர் பாரதியின் பயணம் வேறுபாடானது. அவர் கொழும்பைத் தளமாகக் கொண்டு செயற்பட ஆரம்பித்த போதிலும், தமிழ்த் தேசியத்தின்பால் தீராத பற்றும் பேரன்பும் கொண்டிருந்தார். அவரின் வேர் இந்தப் பூமிக்குரியது என்பதால், தமிழர்களின் அடிப்படைப் பிரச்சினைகளை விட்டுக் கிஞ்சித்தும் விலகாமல் நேரிய – சீரிய – செயற்கரிய பணிகளை ஆற்றினார்.

ஒரு கையை இழந்த நிலையிலும், பேனாவை மறு கையாகவும் – மாற்றுக் கையாகவும் உயர்த்தினார். தன் நம்பிக்கையின் முழுவடிவமாக ஊடகப் பரப்பில் வலம் வந்தார். ஊனம் என்பது எதற்கும் தடையல்ல என்பதை வார்த்தைகளால் அல்லாமல் வாழ்வால் நிரூபித்தவர் பாரதி. ஆதலால், அவரின் மறைவை "ஊடகப் பரப்புக்கான" இழப்பு என்று குறுக்கிவிட முடியாது.

உண்மையில் தமிழ்த் தேசியத்துக்கான பேரிழப்பே பாரதியின் மறைவு. அவரைத் தமிழர் தாயகம் கண்ணீருடன் அஞ்சலித்து வழியனுப்புகின்றது. அன்னாருக்கு எம் புகழ் அஞ்சலிகள்!" – என்றுள்ளது.

# ஐக்கிய மக்கள் சக்தியை புதுப்பிக்க மாவட்டத் தலைவர்கள் நியமனம்



2025 ஆம் ஆண்டுக்காக ஐக்கிய மக்கள் சக்தி கட்சி புதுப்பிக்கப்படுவதாக நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.

கட்சியைப் புதுப்பிக்கும் வகையில் புதியவர்கள் உட்பட 9 மாவட்டத் தலைவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர் என அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் நளின் பண்டார மேலும் கருத்து தெரிவிக்கையில்,

"எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் புதிய மாவட்டத் தலைவர்கள் நியமிக்கப்பட்டார்கள். 2025 ஆம் ஆண்டுக்காகக் கட்சி புதுப்பிக்கப்படுகிறது. நான் இதற்கு முன் மாவட்டத் தலைவராக இருக்கவில்லை. இப்போது குருநாகல் மாவட்டத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளேன்.

புத்தளம் மாவட்டத்துக்கு ஹெக்டர் அப்புஹாமி, மாத்தளை மாவட்டத்துக்கு ரோஹிணி, களுத்துறை மாவட்டத்துக்கு அஜித் பி பெரேரா, கம்பஹா மாவட்டத்துக்கு ஹர்ஷண ராஜகருணா, அநுராதபுரம் மாவட்டத்துக்கு ரோஹண பண்டார, காலி மாவட்டத்துக்கு கயந்த கருணாதிலக, மொனராகலை மாவட்டத்துக்கு ரஞ்சித் மத்துமபண்டார, திருகோணமலை மாவட்டத்துக்கு இம்ரான் மஹ்ரூப், ஆகியோர் இன்று மாவட்டத் தலைவர்களாக நியமிக்கப்பட்டனர்." – என்றார்.




# கல்விக் கல்லூரிகள் மூலம் வழங்கப்படும் பயிற்சி 15 ஆண்டுகளாக மாற்றத்திற்கும் உட்படவில்லை

## பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவிப்பு

பிள்ளைகளின் எதிர்காலத்தை கட்டியெழுப்பும் ஆசிரியர்களை உருவாக்கும் நாட்டின் கல்விக் கல்லூரி முறைமையில் வழங்கப்படும் ஆசிரியர் பயிற்சிக் கல்வி 15 வருடங்களாக எவ்வித மாற்றங்களுக்கும் உட்படவில்லை என பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

புலதிசிபுர தேசிய கல்விக் கல்லூரியின் 25ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நேற்று பொலன்னறுவை புலதிசிபுர கல்விக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட "புலதிசிய தருனை" நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பிரதமர் ஹரிணி அமரசூரிய மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய, புலதிசிபுர கல்விக் கல்லூரியின் இலச்சினையுடன் கூடிய நினைவுப் பலகையை திரைநீக்கம் செய்ததுடன், வளாகத்தில் மரக்கன்று ஒன்றையும் நாட்டினார். 2000 முதல் 2025 வரை இங்கு பணியாற்றிய பீடாதிபதிகள் உட்பட முழு பணிக்குழாமினருக்கான பாராட்டு நிகழ்வும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதன்போது பிரதமர் ஹரிணி அமரசூரிய மேலும் தெரிவிக்கையில்,

"பிரதமர் என்ற வகையில் உத்தியோகபூர்வமாக ஒரு கல்விக் கல்லூரிக்கு விஜயம் செய்வது இதுவே முதல் தடவையாகும்.

எமது அரசாங்கம் கல்விக்கு விசேட கவனம் செலுத்தி வருகிறது. நாட்டில் தேவையான மாற்றத்தை ஏற்படுத்த, கல்வியின் தரத்தில் மாற்றங்கள் ஏற்பட வேண்டும் என்பதை அரசாங்கம் உணர்ந்துள்ளது.

2026 ஆம் ஆண்டு முதல் நாம் செய்யப்போகும் கல்விச் சீர்திருத்தம் ஒட்டுப் போடுகின்ற ஏற்கனவேயுள்ள ஒன்றை இழுத்துச்செல்கின்ற ஒரு முறைமையல்ல. இது ஒரு தரமான மற்றும் மனிதாபிமான மற்றும் நவீன உலகை வெற்றிகொள்ளக்கூடிய ஒரு நபரை உருவாக்கும் கல்வி சீர்திருத்தமாகும.

கல்வியின் தரம் ஆசிரியர்களிலேயே தங்கியுள்ளது, நாம் எதிர்பார்க்கும் இலக்கை அடைய ஆசிரியர்கள் முக்கிய பங்கு வகிக்க வேண்டும். உலகில் சிறந்த கல்வியை நம்மால் கொண்டு வர முடியும், நவீன தொழில்நுட்பத்தை கொண்டு வர முடியும், ஆனால் அனைத்தின் இறுதி முடிவு ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் இடையிலான தரம் மற்றும் மனித உறவுகளின் வலிமையினாலேயே தீர்மானிக்கப்படுகிறது.



இதுவரை நடைமுறையில் இருந்த கல்விச் சீர்திருத்தங்களில் மறந்து போன விடயம் என்னவென்றால், ஆசிரியர்களுக்குப் பயிற்சியும் அறிவும் அளிக்கும் திட்டம் எதுவும் அவற்றில் இருக்கவில்லை என்பதுதான்.

பயிற்சி மற்றும் அறிவு மூலம் ஆசிரியர்களின் தொழில்முறை தரத்தை மேம்படுத்துவதே எங்கள் முதன்மையான கவனமாகும்.

இன்றைய சமூகத்தில் ஒரு ஆசிரியருக்கு உள்ள அங்கீகாரம் பற்றியோ அல்லது ஆசிரியர் தொழிலை நீங்கள் தேர்ந்தெடுத்ததை பற்றியோ நீங்கள் திருப்பதியடைய முடியுமான நிலை உள்ளதா?

ஆசிரியர் தொழில் என்பது ஒரு பிள்ளையின் எதிர்காலத்தை உருவாக்கும் அல்லது அழிக்கும் ஆற்றல் கொண்ட ஒரு தொழில். நாட்டில் மாற்றத்தை ஏற்படுத்த, அத்தகைய சக்தியும், வலிமையும், பொறுப்பும் கொண்ட ஆசிரியர்கள் இந்த நாட்டில் பிறக்க வேண்டும். ஆனால் அத்தகைய கல்வியைப் பெறுவதற்கான சூழல், வளங்கள் அல்லது உட்கட்டமைப்பு கல்விக் கல்லூரிகளில் உள்ளதா? இன்று நான் இந்தக் கல்லூரியில் ஒரு கண்காணிப்பை மேற்கொள்கிறேன், அந்த நிலை இருக்கிறதா என்று பார்ப்போம்.

கல்விக் கல்லூரிகள் மூலம் பட்டங்கள் வழங்குவது பற்றி ஒரு கருத்தாடல் இருப்பது பற்றி நான் அறிவேன். அதனை பெயர் பலகையை மாற்றுவதன் மூலமும் செய்யலாம். கடந்த காலங்களில் இப்படி நடந்துள்ளது. ஆனால் அதன் உள்ளடக்கத்தின் தரம் உள்ளதா என்பதுதான் பிரச்சினை."
– என்றார்.







# கொழும்பு பேர வாவியை துப்புரவு செய்ய புதிய திட்டம்

கொழும்பு, பேர வாவியை தூய்மைப்படுத்தி அதன் மேம்பாட்டிற்கான பரிந்துரைகளை முன்வைப்பதற்காக நிபுணர் குழுவொன்றை நியமிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த நிபுணர் குழுவில் விடயம் சார்ந்த விசேட நிபுணத்துவம் கொண்ட 12 நிபுணர்கள் உள்ளடங்கியுள்ளனர் என நகர அபிவிருத்தி, வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சர் அனுர கருணாதிலக்க தெரிவித்துள்ளார்.

பேர வாவியை தூய்மையாக்குவதற்காக இதற்கு முன்னர் சில வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டிருந்த போதிலும் அவை வெற்றியளிக்கவில்லை.

கொழும்பு நகரில் 21 கழிவு நீர் கட்டமைப்புக்களிலுள்ள நீர், பேர வாவிக்கு திருப்பிவிடப்படுகின்றது.

இவற்றில் 04 பிரதான கழிவு நீர் கட்டமைப்புக்கள் உள்ளடங்கியுள்ளதாக நகர அபிவிருத்தி, வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சர் அனுர கருணாதிலக்க கூறினார்.

இதனை இவ்வருடத்துக்குள் நிறுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பேர வாவியில் துர்நாற்றம் வீசுவதற்கும் நீரின் நிறமாற்றத்திற்கும் பாசிகள் அதிகரித்திருப்பதே காரணமெனவும் அமைச்சர் தெரிவித்தார்.

இந்த நிலைமையைக் கட்டுப்படுத்த வெளிநாட்டு அனுபவங்களை அடிப்படையாகக்கொண்டு விடயத்துடன் தொடர்புடைய நிபுணர் குழுவின் மூலம் விரைவாக வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்படுமெனவும் அமைச்சர் அனுர கருணாதிலக்க மேலும் கூறினார்.

# உயர்நீதிமன்ற தீர்ப்பை சபாநாயகர் அறிவிக்கும்போது தமிழ்மொழி முறையாக உரைபெயர்க்கப்படவில்லை

## சபையில் சிறிதரன் எம்.பி. தெரிவிப்பு

"உள்ளூராட்சி அதிகார சபைகள் சட்டமூலம் தொடர்பான உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை சபாநாயகர் சபைக்கு அறிவிக்கும் போது, அவரின் உரை தமிழ் மொழியில் முறையாக உரைபெயர்க்கப்படவில்லை. ஆகவே சரியான மொழிப்பெயர்ப்பை வழங்க வேண்டும்."

– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன் சபாநாயகரிடம் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றம் நேற்று வெள்ளிக்கிழமை (14) சபாநாயகர் தலைமையில் கூடியது. இதன்போது உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் தொடர்பான உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பினை சபாநாயகர் சபைக்கு அறிவித்தார். இதனைத் தொடர்ந்து எழுந்து உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன்,

"உள்ளூர் அதிகார சபைகள் சட்டமூலம் தொடர்பான உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பினை தாங்கள் சபைக்கு அறிவிக்கும் போது உங்களின் வேகத்துக்கு அமைய தமிழ் மொழியில் சரியாக உரைபெயர்க்கப்படவில்லை.

உரைபெயர்ப்பு முறையாக அமையவில்லை நேற்று மாலை நடைபெறும் அமைச்சுசார் ஆலோசனைக் குழு கூட்டத்தில் தீர்ப்பின் தமிழ் வடிவத்தை சமர்ப்பிக்குமாறு வலியுறுத்துகிறேன்." என்றார்.

சபைக்கு தலைமைத் தாங்கிய சபாநாயகர், "உயர்நீதிமன்றத்தின் தீர்ப்புகள் ஆங்கில மொழியிலேயே கிடைக்கப் பெறும். அதை மொழிபெயர்க்க முடியாது" என்றார்.




மீண்டும் எழுந்து உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன், "சபாநாயகர், சபைக்கு அறிவித்த தீர்ப்பின் உள்ளடக்கத்தை, உரை பெயர்த்தவர் தமிழ் மொழியில் முறையாக உரை பெயர்க்கவில்லை.

தமிழ் உரைபெயர்ப்பு சரியாக அமையவில்லை. ஆகவே அதனை சரியாக மொழிபெயர்த்து தருமாறு கேட்கிறேன்." என்று மீண்டும் வலியுறுத்தினார்.

இதன்போது சபையில் இருந்த ஏனைய உறுப்பினர்கள் சபாநாயகரிடம்" தமிழ் மொழி உரைபெயர்ப்பு முறையாக அமையவில்லை, ஆகவே தாங்கள் விடுத்த நீதிமன்ற தீர்ப்பின் அறிவிப்பின் மொழிப்பெயர்ப்பை தமிழ் மொழியில் தருமாறு கேட்கிறார்" என்று குறிப்பிட்டார்கள்.

சபைக்கு தலைமை தாங்கிய சபாநாயகர், தங்களுக்கு சரியான மொழிப்பெயர்ப்பை வழங்குவதற்கு அறிவுறுத்துகிறேன்" என்றார்.



# யோஷித, டேசிக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல்

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் மகனான யோஷித ராஜபக்ஷ மற்றும் அவரது பாட்டியான டேசி ஃபொரஸ்ட் விக்கிரமசிங்க ஆகியோருக்கு எதிராக சட்ட மா அதிபரால் கொழும்பு மேல்நீதிமன்றத்தில் நேற்று குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

நிதித் தூய்தாக்கல் தடுப்புச் சட்டத்தின் கீழ் குற்றங்களை இழைத்துள்ளமை உள்ளிட்ட 3 குற்றச்சாட்டுகளின் கீழ் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

500 லட்ச ரூபாவுக்கும் அதிக தொகைக்கு இரத்மலானை சிறிமல் உயன மற்றும் தெஹிவளை பகுதிகளில் காணி உள்ளிட்ட சொத்துக்களை கொள்வனவு செய்தமை தொடர்பாக இந்த குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

யோஷித ராஜபக்ஷ குற்றப் புலனாய்வுத் திணைக்களத் தினரால் கடந்த மாதம் 25 ஆம் திகதி கைது செய்யப்பட்டார்.

சிறிமல் உயனவிலுள்ள 34 தசம் 5 பேர்ச்சஸ் காணியை 360 லட்சம் ரூபாவுக்கும் அதிக தொகையைப் பயன்படுத்தி கொள்வனவு செய்த சம்பவம் தொடர்பிலேயே அவர் கைது செய்யப்பட்டிருந்தார்.

அன்றைய தினம் பிற்பகல் கொழும்பு மேலதிக நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட யோஷித ஜனவரி 27 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டார்.

# பணியிடங்களில் இடம்பெறும் விபத்துகளில் வருடாந்தம் 70 பேர் உயிரிழக்கின்றனர்



பணியிடங்களில் இடம்பெறும் விபத்துக்களால் வருடாந்தம் சுமார் 70 பேர் உயிரிழக்கின்றனர் என தொழில் அமைச்சு தெரிவித்துள்ளது.

இத்தகைய விபத்துக்களினால் சுமார் 2000 பேர் காயமடைகின்றனர் என பிரதி தொழில் அமைச்சர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

இதற்கமைய பணியிடங்களை இலக்காகக் கொண்டு அனைவருக்கும் பாதுகாப்பு வேலைத்திட்டத்தை ஆரம்பிக்க தொழில் அமைச்சினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டத்துடன் இணைந்ததாக இந்த நடவடிக்கை திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த வேலைத்திட்டத்தின் ஊடாக அனைத்து பணியிடங்களிலும் தொழிலாளர்கள் வேலை செய்வதற்கு பொருத்தமான சூழலை உருவாக்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## நாமலின் சட்டப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

அமைப்பால் முறைப்பாடு அளிக்கப்பட்டதைத் தொடர்ந்து குற்றப் புலனாய்வுத் திணைக்களம் விசாரணையை ஆரம்பித்துள்ளது.

சமூக ஊடகங்களில் ஒளிபரப்பான நேர்காணல் ஒன்றில், நாமல் ராஜபக்ஷ இரண்டு சட்டத்தரணிகளின் உதவியுடன் சட்டக் கல்லூரியில் நடைபெற்ற பரீட்சையில் கலந்து கொண்டு சட்டவிரோதமாகச் சட்டப் பட்டம் பெற்றுள்ளார் என்று ஒரு தகவல் வெளியாகி இருந்தது.

இந்த விடயம் தொடர்பாக முறையான விசாரணைகள் நடத்தப்பட்டு சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று இலஞ்ச, ஊழலுக்கு எதிரான குடிமக்கள் அதிகார அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

அதன்படி, குறித்த விடயம் தொடர்பாக குற்றப் புலனாய்வு திணைக்களம் விசாரணையைத் ஆரம்பித்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

## இன்று யாழ்ப்பாணம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

கோப்பாய் கலாசாலையில் நடைபெறும் நிகழ்வில் கலந்து கொள்ளும் பிரதமர், அதன் பின்னர் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் அதிகாரிகளைச் சந்தித்துக் கலந்துரையாடல் நடத்தவுள்ளார்.

தொடர்ந்து மாலை ஏழாலை, சுழிபுரம், சண்டிலிப்பாய் பகுதிகளில் இடம்பெறும் மக்கள் சந்திப்புக்களில் பிரதமர் பங்கெடுக்கவுள்ளார்.

இதைத் தொடர்ந்து நாளை ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களுக்கும் பிரதமர் ஹரிணி செல்லவுள்ளார்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆதரிக்கும் முடிவை தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பு எடுத்து, அவருக்கு ஆதரவான பிரசாரங்களில் முழு மூச்சில் ஈடுபட்டிருந்தது.

அவ்வாறு மாங்குளத்தில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் கலந்து கொண்டு பேசிய சுமந்திரன் "சஜித் பிரேமதாஸவுக்கு வாக்களிப்பதன் மூலம் சிங்கள மக்களைத் தோற்கடிக்கச் செய்யுங்கள்" என்று தமிழ் மக்களுக்கு பகிரங்க அழைப்பு விடுக்கிறார் என்னும் சாரப்பட அந்தச் செய்தி வெளியாகியிருந்தது.

அந்தச் செய்தியை முன் பக்க பிரதான தலைப்பு விடயமாக வெளியிட்ட 'சிலோன் டுடே' (ஆங்கில நாளிதழ்), 'மௌபிம' மற்றும் 'அருண' (சிங்கள இதழ்கள்) ஆகிய பத்திரிகைகளுக்கு எதிராக உடனடியாகவே மான நஷ்டம் கோரி சுமந்திரன் கொழும்பு மாவட்ட நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தார்.

ஒவ்வொரு பத்திரிகையிடம் இருந்தும் தலா ஆயிரம் கோடி ரூபா நஷ்ட ஈடு இந்த வழக்கின் மூலம் கோரப்பட்டுள்ளது.

அதில் ஒரு வழக்கில் – 'சிலோன் டுடே' பத்திரிகைக்கு எதிரான வழக்கில் – அந்தப் பத்திரிகைத் தரப்பு நீதிமன்றத்தில் சட்டத்தரணி மூலம் பிரசன்னமாகத் தவறிய சூழலில், எதிராளி இல்லாமலேயே வழக்கு விசாரணையைக் கொழும்பு மாவட்ட நீதிமன்றம் தொடங்கியுள்ளது.

நேற்று சட்டத்தரணி சுமந்திரனின் சாட்சியத்தை ஜனாதிபதி சட்டத்தரணி கனகேஸ்வரனும், தொடர்ந்து இக்ரம் முகமதுவும் நெறிப்படுத்தினர்.

நேற்றைய அமர்வைத் தொடர்ந்து வரும் மே 22, 27 ஆம் திகதிகளில் சுமந்திரனின் சாட்சியம் தொடர்ந்தும் பதிவு செய்யப்பட இருக்கின்றது.

இந்த வழக்குகளில் ஒவ்வொரு பத்திரிகையிடமிருந்தும் தலா ஆயிரம் கோடி ரூபா நஷ்ட ஈடு கோரப்பட்டிருப்பதால் அத்தகைய பாதிப்புக்குரிய கௌரவம் சுமந்திரனுக்கு உண்டா என்பதை இந்த சாட்சியப் பதிவு மூலம் நீதிமன்றம் தீர்மானிக்க இருக்கின்றது.

இதற்காக சுமந்திரன் சமூகத்தில் ஆற்றிய பணிகள், நடவடிக்கைகள், செயற்பாடுகள், குறித்து நேற்று முழு நாளும் நீதிமன்றம் பதிவுகளை அவரது சாட்சியமாக மேற்கொண்டது.

சட்டத்துறையில் சுமந்திரனின் மதிப்பு பற்றிய விடயங்கள் ஒவ்வொன்றாக பதியப்பட்டன. அவர் வாதாடிய வழக்குகள், அரசமைப்பு திருத்தம் தொடர்பான அவரது சமர்ப்பணங்கள், நாடாளுமன்ற மற்றும் பொதுப்பணிகள், சட்டத்துறையில் அவர் பெற்ற கல்வி அறிவு, தகைமைகள் பற்றிய விவரங்கள், ஐம்பதுக்கும் மேற்பட்ட கனிஷ்ட சட்டத்தரணிகள் அவரிடம் பயிற்சி பெற்று வெளியேறி உயர் நிலைகளில் இப்போது இருக்கின்றமை, அவர்களில் ஒருவர் ஜனாதிபதி சட்டத்தரணியாக உயர்த்தப்பட்டுள்ளமை போன்ற பல விடயங்களை விரிவாக நீதிமன்றம் பதிந்து வருகின்றது. தொடர்ந்து அவரது சாட்சியம் இன்னும் இரண்டு நாள்கள் பதிவு செய்யப்பட இருக்கின்றன.

இதேபோன்று 'மௌபிம', 'அருண' ஆகிய இரண்டு சிங்கள பத்திரிகளுக்கும் எதிரான வழக்குகளும் விரைவில் விசாரணைக்கு வர இருக்கின்றன.

இடம் கிடைத்தது என்று ஊடகங்களில் எதையும் எழுதி வெளியிட்டு போனால் சிக்கல்கள் இருக்கும் என்பதை ஊடக தரப்பினர் – குறிப்பாக சமூக ஊடகத் தரப்பினர் – கருத்தில் எடுக்க வேண்டும்.

நான் குறிப்பிடுவது அச்சுறுத்தல் அல்ல. ஊடகத்தைப் பயன்படுத்துபவர்கள் தங்களுக்குரிய பொறுப்புணர்வு மறந்து அதிகப்பிரசங்கித்தனமாக நடந்து கொண்டால் பதில் கூற வேண்டிய இக்கட்டு தவிர்க்க முடியாததாக இருக்கும்.

அதுவும் சுமந்திரன் போன்றவர்கள் – 'சைபர் க்ரைம்' விடயங்களில் விசாரணைக்கான சட்டப் புலமை உள்ளவர்கள் – நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்படாத பின்னணியில், சட்ட விடயங்களில் தாராளமாக கவனம் செலுத்தி, தீவிர நடவடிக்கை எடுக்க நேரம், வசதி, இயலுமை போன்றவை கிட்டியிருக்கின்றன சமயத்தில், தேவையற்று தவறான முறையில் நொட்டிப் பார்ப்பது அநாவசிய சிக்கல்களை தரும், வீணான வினையைத் தேடி மடிக்குள் கட்டிக் கொண்டதாகி விடும் என்பதைத் தரப்புகள் மறந்து விடக்கூடாது...!

ஆதாரங்களை – ஆவணங்களை – சான்றுகளை – கையில் வைத்துக் கொண்டுதான் நொட்டப் புறப்பட வேண்டும். இல்லையேல் சிக்கல் வீணாக நீதிமன்றப் படியேற வைத்து, கடும் தொல்லை தந்துவிடும்...!

- - - - - - - - - - - - - - - - -

## இனி தடையின்றி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அறிவித்துள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நாடு முழுவதும் ஏற்பட்ட திடீர் மின்தடை காரணமாக நுரைச்சோலை அனல் மின்நிலையத்தின் 3 மின்பிறப்பாக்கிகள் செயலிழந்தன.

இதன்காரணமாக, மின்சாரதேவையை நிர்வகிக்க முடியாததால், கடந்த திங்கள் மற்றும் செவ்வாய்க்கிழமைகளில் சுழற்சி முறையில் ஒன்றரை மணி நேர மின் விநியோகத் தடையை அமுல்படுத்த இலங்கை மின்சார சபைக்கு நேரிட்டது.

இருப்பினும், பௌர்ணமி தினம் என்பதால் கடந்த புதன்கிழமை மின் விநியோகத் தடை அமுல்படுத்தப்படவில்லை.

அதேநேரம் சுழற்சி முறையில் ஒரு மணி நேரம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மின் விநியோகத் தடை அமுல்படுத்தப்பட்டது.

செயலிழந்த 3 மின் பிறப்பாக்கிகளை நேற்று வெள்ளிக்கிழமை தேசிய மின் கட்டமைப்புடன் இணைக்க முடியும் என அண்மையில் அறிவிக்கப்பட்டிருந்தது.

இருப்பினும், நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை பிற்பகல் வரை செயற்படாமல் இருந்த மின்பிறப்பாக்கிகள் மீண்டும் இயக்கப்பட்டுள்ளன. அதையடுத்து நேற்று வெள்ளிக்கிழமை சுழற்சி முறையில் மின் விநியோகத் தடை அமுல்படுத்தப்படவில்லை.

அதன்படி, மின் விநியோகத் தடையை முடிவுக்குக் கொண்டுவர முடிவு செய்யப்பட்டுள்ளது என்று மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு நேற்று தெரிவித்துள்ளது.

- - - - - - - - - - - - - - - - -

## இனியும் குரங்குகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அளிக்க வேண்டும். பிரதான செயலாளர்கள், மாவட்ட செயலாளர்கள் அரசியல் பழிவாங்கல்களுக்கு ஆளாகி வருகின்றனர். வெளிநாட்டு முதலீட்டாளர்கள் கூட நாட்டை விட்டு வெளியேறி வருகின்றனர்.

இந்த ஞாயிற்றுக்கிழமையும் மின்சாரம் துண்டிக்கப்படலாம் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. சூரிய சக்தி உற்பத்திக்கு ஏற்ப விநியோகம் இடம்பெறாவிட்டால் மின் தடை ஏற்படும் அபாயம் காணப்படுகின்றது. இது தொடர்பில் அரசாங்கத் தரப்பில் பதில் வழங்க வேண்டும்.

புதிய உற்பத்தி ஆலைகளைத் திறந்து சமநிலையற்ற தன்மையை ஏற்படுத்தாத வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும். இனிமேலும் குரங்குகள் மீது பழி போட வேண்டாம்." – என்றார்.

- - - - - - - - - - - - - - - - -

## அநுர அரசின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வடக்கு மாகாணத்துக்குப் பயணம் மேற்கொண்டுள்ள இலங்கைக்கான கனேடியத் தூதுவர் எரிக் வோல்ஷ், வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகனை ஆளுநர் செயலகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை மாலை சந்தித்துக் கலந்துரையாடினார். இதன்போதே கனேடியத் தூதுவர் மேற்கண்டவாறு கூறினார்.

இந்தச் சந்திப்பின்போது வடக்கு மாகாணத்தின் தற்போதைய நிலைமைகள், தேவைப்பாடுகள் மற்றும் மக்களின் எதிர்பார்ப்புக்கள் தொடர்பாகக் கனேடியத் தூதுவருக்கு வடக்கு மாகாண ஆளுநர் விரிவாக எடுத்துரைத்தார்.

வனவளத் திணைக்களம் மற்றும் வனஉயிரிகள் திணைக்களம் என்பன காணிகளை வர்த்தமானியில் பிரசுரித்த முறைமை தவறானது என்றும், அதனால் ஏற்பட்டுள்ள சிக்கல்கள் தொடர்பிலும் ஆளுநர் குறிப்பிட்டார்.

இடம்பெயர்ந்த மக்கள் தங்களது சொந்தக் காணிகளையே விடுவிக்குமாறு கோருகின்றனர் என்றும், பாதுகாப்புத் தரப்பினரின் காணிகளைக் கோரவில்லை என்பதையும் சுட்டிக்காட்டிய ஆளுநர், இங்கு காணிகள், பாதைகள் விடுவிக்கப்படும்போது தெற்கில் தவறாக சித்தரிக்கப்படுகின்றது என்றும் தெரிவித்தார்.

சுற்றுலாத்துறையின் அபிவிருத்தியின் அவசியத்தை ஆளுநர் வலியுறுத்தினார்.

பாதை வலையமைப்பு மேம்படுத்தப்பட வேண்டியது தொடர்பாகவும் ஆளுநர் சுட்டிக்காட்டினார்.

பலாலி விமான நிலையத்தின் அபிவிருத்தி, பயணிகள் கப்பல் போக்குவரத்து என்பன தொடர்பிலும் ஆளுநர் குறிப்பிட்டார்.

பலாலி விமான நிலையத்துக்குக் கட்டுநாயக்கா விமான நிலையத்திலிருந்து சேவைகள் இடம்பெற்றால் சிறப்பானது என்று கனேடியத் தூதுவர் சுட்டிக்காட்டினார்.

இலங்கைக்கு வருகை தரும் புலம்பெயர் தமிழர்கள், தமது பயணப் பொதிகளை பஸ்களில் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பிவிட்டு, கொழும்பிலிருந்து சென்னைக்குச் சென்று அங்கிருந்து விமானம் மூலம் யாழ்ப்பாணத்தை வந்தடைகின்றனர் என்பதையுத் தூதுவர் குறிப்பிட்டார்.

தற்போதைய அரசின் வரவு – செலவுத் திட்டம் தொடர்பில் பலத்த எதிர்பார்ப்பு நிலவுவதாகவும் குறிப்பிட்ட தூதுவர், அரசு கூறிய விடயங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் மக்கள் ஆவலாக இருக்கின்றமையை தான் சந்தித்த சிவில் சமூகக் குழுக்களிடமிருந்து அறியக் கூடியதாக இருந்ததாகவும் தெரிவித்தார்.

வடக்கு மாகாண ஆளுநராக, நீங்கள் (நாகலிங்கம் வேதநாயகன்) நியமிக்கப்பட்டமை தொடர்பில் பல தரப்பட்டவர்களிடமிருந்து சாதகமான செய்திகளைக் கேட்டதாகக் குறிப்பிட்ட தூதுவர், உங்கள் மீது வடக்கு மக்கள் நிறைய எதிர்பார்ப்புடனும், நம்பிக்கையுடனும் இருக்கின்றனர் என்பதையும் தம்மால் அறியமுடிவதாகவும் தெரிவித்தார்.

மேற்படி சந்திப்பில்

07

## அநுர அரசின்...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி...)

வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் மு.நந்தகோபாலன், ஆளுநரின் இணைப்புச் செயலாளர் எந்திரி அ.எ.சு. ராஜேந்திரா ஆகியோரும் கலந்து கொண்டனர்.
















# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்


259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## அநுரவின் கன்னி பட்ஜெட்

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் கன்னி வரவு - செலவுத் திட்டம் நாளைமறுதினம் திங்கட் கிழமை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட உள்ளது.

வழமையாக வருட இறுதியில் அடுத்த முழு ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படுவதே இலங்கையில் நிர்வாக முறைமை.

ஆனால் தேசிய மக்கள் சக்தி அரசு கடந்த ஆண்டு இறுதியில் ஆட்சிக்கு வந்த காரணத்தினால், அதனால் 2025க்கான முழு வரவு - செலவுத் திட்டத்தை கடந்த வருட இறுதியில் சமர்ப்பிக்க முடியவில்லை. அதனால் இந்த ஆண்டின் முதல் நான்கு மாத காலத்துக்கான இடைக்கால நிதி ஒழுங்கு ஏற்பாடு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இப்போது எஞ்சிய எட்டு மாதங்களுக்கான வரவு - செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டு, அதன் மீதான விவாதம் நடைபெற இருக்கின்றது. குழுநிலை விவாதங்கள் நாடாளுமன்றில் முடிவுக்கு வர, மார்ச் 21ஆம் திகதி இந்த வரவு - செலவுத் திட்டம் நிறைவேற்றப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அதன் பின்னர் ஏப்ரல் முதலாம் திகதியில் இருந்து அது நடைமுறைக்கு வரும்.

நிதி அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவே வரவு - செலவுத் திட்டத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க உள்ளார்.

நீண்ட காலம் எதிரணியில் இருந்தபடி முன்னைய அரசுகளின் வரவு - செலவு திட்டங்களை மோசமாக - காட்டமாக - மட்டமாக - விமர்சித்து வந்த தேசிய மக்கள் சக்தி தரப்பு இப்போது தன்னுடைய வரவு - செலவுத் திட்டத்தைச் சமர்ப்பிக்க வேண்டிய நிலைக்கு வந்துள்ளது.

தாங்கள் ஆட்சிக்கு வந்தால் வரவு - செலவு திட்டத்தின் மூலம் மக்களுக்கு சலுகைகளையும், தாராள நிவாரணங்களையும், பொருளாதார வளர்ச்சிக்கான அபரிமிதமான திட்டங்களையும் சமர்ப்பிப்போம் என்று மார்தட்டி வந்த தேசிய மக்கள் சக்தி, இப்போது தனது வரவு - செலவு திட்டத்தில் அப்படி என்ன விடயங்களை முன்வைக்கப் போகின்றது என்பது தொடர்பில் பெரும் எதிர்பார்ப்பு நிலவுகின்றது.

இந்த வரவு - செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்களுக்கு கணிசமான சம்பள உயர்வு வழங்கப்படும் என்று ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவே கூறிவந்திருக்கின்றமையால் சம்பளம் அதிகரிப்பு நிச்சயம் இம்முறை இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது

அதேபோன்று ஓய்வூதியம் அதிகரிப்பு, விசேட தேவையுடையோருக்கான கொடுப்பனவு அதிகரிப்பு, வயது முதிந்தோருக்கான கொடுப்பனவு அதிகரிப்பு உட்பட பல்வேறு முன்மொழிவுகளும் வரவு - செலவுத் திட்டத்தில் இடம்பெற உள்ளன என்று கூறப்படுகின்றது.

அரச ஊழியர்களுக்கு குறிப்பிடத்தக்களவான சம்பள உயர்வு வழங்கப்படும் அதே நேரம் அரச ஊழியர்களைப் போன்று தனியார் துறையினருக்கான சம்பள உயர்வும் இடம்பெற வேண்டுமென தொடர்ச்சியான கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. ஆனால், அரசாங்கம் அதற்கான முயற்சிகளில் ஈடுபடவில்லை என எதிர்க்கட்சிகள் குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளன. இந்த விடயத்தை ஜனாதிபதி எவ்வாறு கையாளப் போகின்றார் என்ற எதிர்பார்ப்பு உள்ளது.

பொருளாதார வளர்ச்சிக்கான பல திட்டங்களை ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க இந்த வரவு - செலவுத் திட்டத்தில் முன்மொழிவார் என அரசாங்கம் கூறியுள்ளது.

சரித்திரத்தையே புரட்டிப் போடும் விதத்தில் தேசிய மக்கள் சக்திக்கு மக்கள் வாக்களித்துப் பெரு வெற்றி பெற வைத்திருக்கின்றனர். அதன் சாதகமான பெறுபேறுகளை இந்த வரவு - செலவுத் திட்டத்தில் மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

அதனை ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க நிறைவு செய்வாரா? முடிவு திங்கள் தெரிந்து விடும்.

# கசிப்புடன் ஒருவர் கைது






(பா.சதீசன்)

புதுக்குடியிருப்பு நகர் பகுதியில் விற்பனைக்கு தயாராக இருந்த கசிப்புடன் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

புதுக்குடியிருப்பு 10 வட்டாரம் பகுதியில் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி, விற்பனை இடம்பெறுவதாக ஒட்டிசுட்டான் பொலிஸ் நிலைய பெரும் குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி ரி. சுபேசனுக்கு நேற்று தகவல் கிடைத்துள்ளது.

இந்த தகவலையடுத்து சம்பவ இடத்திற்கு சென்ற ஒட்டிசுட்டான் பொலிஸாரால் 25 லீற்றர் 750 மில்லிலீற்றர் கசிப்பு புதுக்குடியிருப்பு நகர் பகுதியில் உள்ள வீட்டிற்கு முன்னால் விற்பனைக்கு தயாராக இருந்த நிலையில் கைப்பற்றப்பட்டுள்ளது. அத்தோடு சந்தேக நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

புதுக்குடியிருப்பு நகர் பகுதியில் வசிக்கும் 38 வயதுடைய நபரே கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் ஒட்டுசுட்டான் பொலிஸாரின் விசாரணையின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்தப்பட இருப்பதாக ஒட்டுசுட்டான் பொலிஸார் தெரிவித்தனர்.

# மினுவங்கொடை கொலையுடன் தொடர்புடைய மூவர் கைது



மினுவங்கொட கல்லொலுவ பகுதியில் நபரொருவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட சம்பவம் தொடர்பாக மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மோட்டார் சைக்கிளில் பயணித்த 35 வயதான ஒருவர் கடந்த 07 ஆம் திகதி துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்தார்.

இந்த சம்பவம் தொடர்பில் 24 மற்றும் 34 வயதான மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொலையின் பின்னர் தப்பிச் செல்வதற்கு உதவியமை, தங்குமிட வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தமை, சதித்திட்டம் தீட்டியமை, போலி இலக்கத் தகடுகளைப் பயன்படுத்தி செசி இலக்கங்களை அழித்து, தகவல்களை மறைத்து, மோட்டார் சைக்கிளை குற்றச் செயல்களுக்குப் பயன்படுத்துவதற்காக உதவி செய்தமை ஆகிய குற்றச்சாட்டுகள் சந்தேகநபர்கள் மூவர் மீதும் சுமத்தப்பட்டுள்ளன.

சந்தேகநபர்களில் ஒருவருக்கு ஏற்கனவே ருவன்வெல்ல நீதவான் நீதிமன்றத்தினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

எந்தக் காலத்திலும்.. எந்த வடிவத்திலும்
உங்களோடு நாங்கள்...
செந்தியின்
தமிழன்
வழிகாட்டி
Tamils' Guide
Since 1996
416-615-4646 info@tamilsguide.com
www.tamilsguide.com





# ஜனாதிபதி செயலாளருடன் துருக்கித் தூதுவர் சந்திப்பு

ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க மற்றும் துருக்கி குடியரசின் தூதுவர் செமி லுட்பூடர்கட் ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.

இலங்கைக்கும் துருக்கிக்கும் இடையில் தற்போதுள்ள இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்திக்கொண்டு, இலங்கையின் பொருளாதார வளர்ச்சி இலக்குகளை அடைவதற்கு தொடர்ச்சியான ஆதரவு வழங்கப்படும் என துருக்கி தூதுவர் இதன்போது உறுதியளித்தார்.

அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள “கிளீன் ஸ்ரீலங்கா” வேலைத்திட்டத்திற்கு துருக்கி குடியரசின் பாராட்டுகளைத் தெரிவித்த தூதுவர், டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் கிராமிய மக்களின் வறுமையை மட்டுப்படுத்துவதற்கான அரசாங்கத்தின் திட்டத்திற்குத் தேவையான ஆதரவை வழங்கும் என்றும் கூறினார்.

மேலும், கல்வி, சுகாதாரம், விவசாயத்தை உள்ளிட்ட துறைகளின் மேம்பாட்டுக்காக தற்போதைய அரசாங்கம் செயல்படுத்தும் திட்டங்களுக்கு துருக்கி தொடர்ந்தும் ஆதரவு வழங்கும் என்றும், எதிர்காலத்தில் அதற்கான பல ஒப்பந்தங்கள் கைசாத்தி எதிபார்ப்பதாகவும் தூதுவர் தெரிவித்தார்.

மேலும், துருக்கியில் கல்வி கற்க இலங்கை மாணவர்களுக்கு தற்போது வழங்கப்படும் 15 புலமைப்பரிசில் கோட்டா 25 புலமைப்பரிசிலாக அதிகரிக்கப்படும் என்றும் தூதுவர் தெரிவித்தார்.

இதேவேளை, ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவை இந்த ஆண்டின் ஏப்ரல் மாதமளவில் துருக்கிக்கு விஜயம் மேற்கொள்ளுமாறும் தூதுவர் அழைப்பு விடுத்தார்.

துருக்கி தூதரக தூதுக்குழுவின் பிரதித் பிரதானி மர்வே கோட்ஸே ஒட்லு உள்ளிட்டவர்களும் இதில் கலந்துகொண்டனர்.









# வடக்கின் அபிவிருத்தியில் அநுர அரசு அதீத ஆர்வம்

## சந்தர்ப்பத்தை நாம் இழக்கக் கூடாது என்கிறார் ஆளுநர்





**(எஸ்.நிதர்ஷன்)**

"வடக்கு மாகாணத்தின் அபிவிருத்தி தொடர்பில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கம் சாதகமான நிலைப்பாட்டைக்கொண்டிருக்கும் இந்தத் தருணத்தில் அதைப் பயன்படுத்தி எமது மாகாணத்தைத் துரிதமாக அபிவிருத்தி செய்துகொள்ள வேண்டும். இதைப் போன்றதொரு சந்தர்ப்பத்தை நாம் இழக்கக் கூடாது."

– இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் நோய்தடுப்பு பராமரிப்பு சேவைப் பிரிவுக்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்ட பாலம் நிறுவனத்தின் நிதி உதவியில் வன்னி ஹோப் நிறுவனம் ஊடாக இந்த மூன்று மாடிக் கட்டடம் அமைக்கப்படவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு அடிக்கல் நடுகை செய்த பின்னர் ஆளுநர் தனது உரையில்,

"சுயநலம் மலிந்த இந்தக் காலத்தில் மற்றையவர்களுக்கு உதவி செய்பவர்கள் அருகிச் செல்கின்றனர். அவ்வாறானதொரு நிலைமையில் இவ்வாறானதொரு உதவியைச் செய்வதற்கு முன்வந்தவர்கள் பாராட்டப்பட வேண்டியவர்களே. புலம்பெயர்ந்து சென்றாலும் எமது மண்ணுக்கும் மக்களுக்கும் சேவை செய்ய விரும்பும் அவர்களது எண்ணம் மிகப்பெரியது.

தெல்லிப்பழை புற்றுநோய் மருத்துவமனைக்கான தேவைகள் இன்னமும் நிறைய இருக்கின்றன. அவையும் விரைவில் பூர்த்தி செய்யப்பட வேண்டும்." – என்றார்.







# வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறியதில் காயமுற்ற இளம் குடும்பஸ்தர் உயிரிழப்பு

(பா.சதீசன்)

முறிப்பு பகுதியில் குழுக்களுக் கிடையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கைக்கலப்பில் குடும் பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்து யாழ்ப் பாணம் வைத்தியசாலையில் சேர்க் கப்பட்ட நிலையில் நேற்றறைறைய தினம் சிகிச்சை பலனின்றி உயிரி ழந்துள்ளார்.

முல்லைத்தீவு – முள்ளியவளை – முறிப்பு பகுதியில் ஒரு குழுவினர் இணைந்து குடும்பஸ்தர் ஒருவருடன் வாய்த்தர்க்கதில் ஈடுபட்டுள்ளனர். பி-ன்னர் வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறியது. இரும்புக் கம்பியால் தாக் கப்பட்டு இளம் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் முல லைத்தீவு மாஞ்சோலை வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் வைத் தியசாலைக்கு மாற்றப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்றையதினம் உயிரி ழந்துள்ளார்.

இந்தச் சம்பவத்தில் 36 வயது மதிக் கத்தக்க முறிப்பு பகுதியில் வசிக்கும் மோகன் கோகுலன் எனும் குடும்பஸ் தரே படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் வைத்தியசாலையில் மரணமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் இது வரை எவரும் கைது செய்யப்பட வில்லை.



# கிழக்கு பிரதி பொலிஸ் மா அதிபர் வர்ண ஜெயசுந்தர பெறுப்பேற்றார்

(கனகராசா சரவணன்)

கிழக்கு மாகாண புதிய சிரேஷ்ட் பிரதி பொலிஸ் மா அதிபராக நிய மனம் பெற்றுள்ள சட்டத்தரணி வருண ஜெயசுந்தர மட்டக்களப் பிலுள்ள கிழக்கு மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் பணி மனையில் நேற்றுக் கடமைகளைப் பெறுப்பேற்றார்.

மட்டக்களப்பு, அம்பாறை, திரு கோணமலை, கந்தளாய் பிராந் தியங்களுக்குப் பொறுப்பான சீரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள் மட்டக்களப்பு மாவட்ட பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் உட்பட உயர்பொலிஸ் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

பொலிஸாரின் அணிவகுப்பு மரியாதையையும் புதிய சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் ஏற்றுக்கொண்ட பின்னர் கடமைகளை பெறுப்பேற் றுக் கொண்டார். புதிய சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் விசேட அதி ரடிப்படையின் கட்டளை அதிகாரி யாக கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.





# உதவித் தேர்தல் ஆணையாளர்கள் பலருக்கு உடனடியாக இடமாற்றம்

**(ந.லோகதயாளன்)**

இலங்கையின் மாவட்டங்களின் உதவித் தேர்தல் ஆணையாளர்கள் பலருக்கு உடனடியாக இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் அதிகாரிகளிற்கு ஆணைக்குழுவினால் உடனடியாக இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

இதற்கமைய வடக்கில் வவுனியா மாவட்டத்திற்கு சி.அமல்ராஜ், யாழ்ப்பாணம் மாவட்டத்திற்கு ஆர்.சசிலன், மன்னார் மாவட்டத்திற்கு முகுந்தன், கிளிநொச்சி மாவட்டத்திற்கு வே.சிவராஜா எனப் புதியவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதேநேரம் முல்லைத்தீவு மாவட்டத்திற்கு ஆதவன் நிமிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# தமிழ் ஊடகர்களுக்கான புதிய அமைப்பு தமிழ்ச் சங்கத்தில் நாளை விசேட கூட்டம்

இலங்கையில் அச்சு, இலத்திரனியல், இணையதள மற்றும் பதிவு செய்யப்பட்ட சமூக ஊடகங்களில் பணி புரியும் ஊடகவியலாளர்களுக்கெனத் துணிந்து, தனித்துவத்துடன் செயற்படக் கூடிய வகையிலான அமைப்பொன்றை உருவாக்கும் வகையில் விசேட கூட்டமொன்று நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் நடைபெறவுள்ளது.

இதர ஊடக அமைப்புகளில் அங்கம் வகிக்காத, ஊடகவியலாளர்களுக்கெனத் தனித்துவத்துடன் இயங்கு நிலையில் செயற்பட வேண்டிய அமைப்பின் அவசியத்தை விரும்பும், துணிந்து செயற்படக்கூடிய ஊடகவியலாளர்கள் இதில் கலந்துகொள்ளுமாறு இந்தக் கூட்டத்தை ஏற்பாடு செய்துள்ள சிரேஷ்ட ஊடகர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தமிழ் ஊடகவியலாளர்களின் பிரச்சினைகளுக்குக் குரல் கொடுக்கும் அரசியல் பின்னணி அற்ற அமைப்பின் தேவை காலத்தின் கட்டாயம் என்றும் அவர்கள் மேலும் சுட்டிக்காட்டுகின்றனர்.

வடக்கு, கிழக்கு மற்றும் மலையகச் செய்தியாளர்கள் உட்பட அனைத்து ஊடகங்களிலும் உள்ள ஊடகர்கள் நிச்சயம் இதில் கலந்துகொள்ளுங்கள் என்றும் அவர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.



# ஊடகர்களின் கொலைக்கு நிச்சயம் நீதி கிடைக்கும்!

## அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ உறுதிமொழி



"ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ள சம்பவங்களுடன் தொடர்புடைய நபர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள். இந்த விடயத்தில் நிச்சயம் நீதி நிலைநாட்டப்படும்."

– இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளரும் சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:–

"ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்க படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பான விசாரணைகள் இன்னும் நிறைவுபெறவில்லை. அவை நடைபெற்று வருகின்றன. விசாரணையில் தெரியவரும் விடயங்களுக்கு அமைய தொடர்புடையவர்களுக்கு வழக்கு தொடரப்படும்.

குற்றவாளிகளைப் பாதுகாக்க வேண்டிய தேவைப்பாடு நீதி அமைச்சருக்கு கிடையாது. குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்தவும், வழக்கு தொடுக்கும் விடயத்தில் அரசு உறுதியாக உள்ளது.

சம்பந்தப்பட்ட நிறுவனங்களை அழைத்து ஜனாதிபதியும் பேச்சு நடத்தி வருகின்றார். எனவே, நிச்சயம் நீதி நிலைநாட்டப்படும். இந்த விடயத்தில் எவரும் அச்சம்கொள்ள வேண்டியதில்லை." – என்றார்.



# கச்சதீவு திருவிழாவிற்கான முன் ஆயத்தப் பணி மாவட்டச் செயலக அதிகாரிகள் நேரில் ஆய்வு!

(ந.லோகதயாளன்)

கச்சதீவு திருவிழாவிற்கான முன் ஆயத்தப் பணிகளிற்காக மாவட்டச் செயலக அதிகாரிகள் நேற்று அங்கு நேரில் சென்று பார்வையிட்டனர்.

நெடுந்தீவு பங்குத் தந்தை, மாவட்ட மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் நேற்றுக் கடற்படையினரின் உதவியுடன் கச்சதீவிற்குச் சென்று முன் ஆயத்தப் பணிகள் தொடர்பில் ஆராய்ந்தனர்.

மார்ச் 14ஆம், 15 ஆம் திகதிகளில் இடம்பெறும் கச்சதீவு புனித அந்தோனியாரின் வருடாத்த உற்சவத்திற்கான ஏற்பாடுகளே நேற்று நேரில் சென்று மேற்கொள்ளப்பட்டன.

இலங்கை, ,ந்திய யாத்திரிகர்களின் இறங்குதுறைகள், தங்குமிடம், நீர் வசதி மற்றும் சுகாதார ஏற்பாடுகள் தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்பட்டது.







# இங்கு மீண்டும் இனவாதம் தலைதூக்க அனுமதியோம்

## தையிட்டி விகாரைப் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு என்று அமைச்சர் சந்திரசேகர் வாக்குறுதி

(எஸ்.நிதர்ஷன்)

"உறக்கத்தில் உள்ள இனவாதத்தை மீண்டும் எழும்ப அனுமதிக்க முடியாது. அதனால் தையிட்டி விகாரை விவகாரத்தை விரைவில் தீர்த்து வைப்போம்." –

– இவ்வாறு கடற்றொழில் அமைச்சர் இ.சந்திரசேகர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 2025ஆம் ஆண்டுக்கான பன்முகப் படுத்தப்பட்ட வரவு – செலவுத் திட்டத்தின் வேலைத்திட்டங்களை நடைமுறைப் படுத்தல் தொடர்பான கலந்துரையாடல் நேற்று வெள்ளிக்கிழமை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் கடற்றொழில் அமைச்சருமான இராமலிங்கம் சந்திரசேகர் தலைமையில் நடைபெற்றது.

அதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துக் தெரிவிக்கும்போது மேற்கண்டவாறு கூறிய அமைச்சர் தொடர்ந்து குறிப்பிடுகையில்,

"தையிட்டி விகாரை விவகாரம் விரைவில் முடிக்கப்பட வேண்டும். இல்லையெனில் எதிர்காலத்தில் பாரிய விளைவுகளை அது ஏற்படுத்தும்.

உறக்கத்தில் உள்ள இனவாதத்தை மீண்டும் எழும்பவிடக் கூடாது. அதனால் அடிப்படையில் இவ்வாறான பிரச்சினைகள் உருவாகுவதை அனுமதிக்க முடியாது.

விகாரை விவாகரத்தில் பாதிக்கப்பட்ட காணி உரிமையாளர்கள், அப்பிரதேச மக்கள், மத தலைவர்கள், சிவில் சமூக பிரதிநிதிகள் முதலிய தரப்பினர்களுடன் விரைவில் பேசவுள்ளோம்.

விகாரை கட்டப்பட்டுள்ள காணியை மாத்திரம் தருமாறும், விகாரையைச் சுற்றியுள்ள ஏனைய காணிகளை மக்களிடம் மீள கையளிக்கத் தயாராக உள்ளதாகவும் விகாராதிபதி தெரிவித்துள்ளார்.

எனவே, விகாரை விவகாரத்தில் யாருக்கும் பாதிப்பில்லாத வகையில் அதனை தீர்க்க விரைந்து நடவடிக்கை எடுப்போம்." – என்றார்.

# 2025 பட்ஜட் மூலம் வடக்கு, கிழக்கில் பெருமளவு அபிவிருத்திப் பணிகள்

## அரசு உறுதி என்கின்றார் பிரதி அமைச்சர் பிரதீப்

"2025ஆம் ஆண்டு வரவு – செலவுத் திட்டத்தின் மூலம் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பெரும் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வதில் அரசாங்கம் உறுதியாகவுள்ளது. இது தொடர்பான அறிவிப்புகள் விரைவில் வெளியிடப்படும்."

– இவ்வாறு பெருந்தோட்டம் மற்றும் சமூக உட்கட்டமைப்பு பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் தெரிவித்தார்.



யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருந்த பிரதி அமைச்சர், ஊடகவியலாளர் சந்திப்பிலும் ஈடுபட்டார். இதன்போது, 'வடக்கு மாகாணத்தின் அபிவிருத்தி தொடர்பில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் சிறப்புத் திட்டமிடல்களைக் கொண்டுள்ளதா?' என்று ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

"தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் பிரதான இலக்குகளில் வடக்கு – கிழக்குப் பகுதிகளை அபிவிருத்தி செய்வதும் ஒன்றாகும். இன்னும் சில காலத்தில் முன்வைக்கப்படவுள்ள வரவு – செலவுத் திட்டத்தில் இது தொடர்பான அறிவிப்புக்களை நீங்கள் எதிர்பார்க்கலாம்.

வடக்கிலும் கிழக்கிலும் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களும், வறுமைக் கோட்டுக்கு கீழ் உள்ள மக்களும் அதிகளவில் உள்ளனர். அவர்களின் வாழ்க்கையை அழகாகவும், வளமாகவும் மாற்றுவதை நாங்கள் எங்களின் நோக்கமாகவே கொண்டுள்ளோம்." – என்றார்.

# எலோன் மஸ்கை சந்தித்தார் மோடி



இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தனது இரண்டு நாள் வொஷிங்டன் பயணத்தின் போது, புதிதாக நிறுவப்பட்ட அரசாங்கத் திறன் துறைக்கு தலைமை தாங்கும் சிறப்பு அமெரிக்க அரசாங்க அதிகாரியாக நியமிக்கப்பட்ட எலோன் மஸ்க்கை சந்தித்துள்ளார்.

வொஷிங்டனில் அமைந்துள்ள பிளேர் ஹவுஸில் இடம்பெற்ற இந்த சந்திப்பின் போது, டெஸ்லா தலைமை நிர்வாக அதிகாரி தனது குழந்தைக ளுடன் மோடியை சந்தித்தார்.

இந்த சந்திப்பு குறித்து எக்ஸில் பதி விட்டுள்ள மோடி,

“இந்தியாவின் சீர்திருத்த முயற்சிகள் மற்றும் ‘குறைந்தபட்ச அரசு, அதிக பட்ச ஆட்சி’ பற்றி தொழில்நுட்ப பில்லி யனருடன் விவாதித்ததாக பதவிட்டார்.

அத்துடன், விண்வெளி, இயக்கம், தொழில்நுட்பம் மற்றும் கண்டுபிடிப்புகள் போன்ற பல்வேறு விடயங்களைப் பற்றி நாங்கள் விவாதித்தோம்.

எலோன் மஸ்க்கின் குழந்தைகளுடன் தனது புதுமையான தருணங்களின் காட்சிகளைப் பகிர்ந்து கொண்டார், அதில், பில்லியனரின் குடும்பத்தைச் சந்தித்த தும், பலதரப்பட்ட விடயங்களைப் பற்றிப் பேசுவதும் மகிழ்ச்சியாக இருந்தது,” என்று பதவிட்டார்.

டொனால்ட் ட்ரம்ப் வெள்ளை மாளி கைக்கு மீண்டும் திரும்பிய பின்னர் தனது முதல் அமெரிக்க பயணமாக பிரத மர் மோடி கடந்த வியாழன் அதிகாலை வொஷிங்டன் டிசியை சென்றடைந்தார்.

மோடியின் அமெரிக்க விஜயம் குறிப் பிடத்தக்க கவனத்தை ஈர்த்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# புனித திரிவேணி சங்கமத்தில் கோடிக்கணக்கான பக்தர்கள்!



திரிவேணி சங்கமத்தில் புனித நீராடுவதற்காக நேற்று வெள்ளிக் கிழமை பிரயாக்ராஜில் நடைபெற்று வரும் மகா கும்பமேளாவில் ஏராள மான பக்தர்கள் குவிந்தனர்.

2025 மகா கும்பமேளா நிகழ்வு தொடங்கியதில் இருந்து 491.4 மில்லி யனுக்கும் அதிகமான பக்தர்கள் திரி வேணி சங்கமத்தில் (கங்கை, யமுனை மற்றும் புராண சரஸ்வதியின் சங்கமம்) நீராடியுள்ளதாக உத்தரப்பிரதேச அரசாங் கத்தின் தகவல்கள் தெரிவிக்கின் றன.

நேற்று முன்தினம் இரவு 8 மணி நிலவரப்படி, கிட்டத்தட்ட 8.54 மில்லியன் மக்கள் புனித நீராடியுள்ளனர் என்று உத்தரப்பிரதேச அரசாங்கத்தின் தகவல் துறை சுட்டிக்கட்டியுள்ளது.

கடந்த ஜனவரி மாத பௌர்ணமியில் தொடங்கிய மகா கும்பமேளா நிகழ்வு உலகெங்கிலும் உள்ள பக்தர்களை ஈர்க்கும் மிகப்பெரிய ஆன்மீக மற்றும் கலாச்சார விடயமாக பார்க்கப்படுகிறது.

பிரமாண்டமான நிகழ்வு பெப்ரவரி 26 ஆம் திகதி மகாசிவராத்திரி வரை தொடரும்.

# நடிகர் விஜய்க்கு பலத்த பாதுகாப்பு!



தென்னிந்திய சினிமா நடிகரும், தமிழக வெற்றிக் கழகத் தலைவருமான ஜோசப் விஜய்க்கு இந்திய மத்திய உள் துறை அமைச்சகம் ‘Y’ அளவிலான பாதுகாப்பை வழங்கியுள்ளது.

இதன்படி, தமிழகத்தில் அவருக்கு CRPF பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் ஆயுதம் ஏந்திய வீரர்கள் உட்பட 8 முதல் 11 காவலர்கள் 24 மணிநேரமும் பாது காப்பில் இருப்பார்கள்.

‘தளபதி’ என்று தனது ரசிகர்களால் அன்புடன் அழைக்கப்படும் விஜய், தமி ழக வெற்றிக் கழகத்தை ஒரு வருடத் திற்கு முன்பு நிறுவி, 2026 ஆம் ஆண்டு தமிழகத்தில் நடைபெறவுள்ள சட்ட மன்றத் தேர்தலுக்குத் தயாராகி வரு கிறார்.

விஜய் தனது கட்சியின் உள்கட்ட மைப்பை வலுப்படுத்துவதுடன், தேர் தல் வியூகங்களில் கவனம் செலுத்தி வருகிறார்.

அவர் ஒரு பொதுக்குழு கூட்டத்தை நடத்த திட்டமிட்டுள்ளார்.

மேலும், ஆந்திரப் பிரதேச முன்னாள் முதல்வர் ஜெகன் மோகன் ரெட்டியின் முயற்சிகளைப் போலவே மாநிலம் முழுவதும் “ரோட்ஷோ” நடத்தவும் அவர் பரிசீலித்து வருகிறார் என கூறப்படுகிறது.

சரியான திகதிகள் மற்றும் விவரங் கள் இன்னும் அறிவிக்கப்படவில்லை என்றாலும், இந்த ஆண்டு நிகழ்வு நடத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படு கிறது.

இந்த நிலையில் தற்போதுள்ள அச்சுறுத்தல் நிலைகள், உளவுத் துறை அறிக்கைகள் மற்றும் விஜய்யின் வளர்ந்து வரும் அரசியல் முக்கியத் துவத்தின் அடிப்படையில் ‘Y’ பிரிவு பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது.

இந்த அளவிலான பாதுகாப்பு தற் போதைக்கு போதுமானதாகக் கரு தப்பட்டாலும், தமிழகத்தில் அரசியல்வாதி யாக அவரது உயரும் சுயவிவரத்தை இது பிரதிபலிக்கிறது.

இந்த பாதுகாப்பு ஏற்பாட்டிற்கான உத்தரவை இந்திய மத்திய உள்துறை அமைச்சகம் அதிகாரப்பூர்வமாக வெளி யிட்டுள்ளது.

# சட்டவிரோதமாக அமெரிக்காவில் தங்கியுள்ள இந்தியர்களை மீண்டும் நாட்டிற்கு அழைப்போம்

## ட்ரம்பிடம் இந்திய பிரதமர் நரேந்திர மோடி உறுதி



சட்டவிரோதமாக அமெரிக்காவில் தங்கியுள்ள இந்தியர்களை நாட்டிற்கு அழைத்துக்கொள்வதாக இந்திய பிரதமர் நரேந்திர மோடி உறுதியளித்தார்.

அத்துடன், ஆட்கடத்தலை முற்றாக ஒழிக்க வேண்டும் எனவும் மோடி கூறினார்.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்புக்கும் இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கும் இடையிலான ஒன்றிணைந்த ஊடக சந்திப்பில் மோடி இதனை குறிப்பிட்டார்.

2 நாள் உத்தியோகப்பூர்வ விஜயம் மேற்கொண்டு அமெரிக்காவுக்கு சென்றுள்ள இந்திய பிரதமர் வெள்ளை மாளிகையில் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பை நேற்று சந்தித்தார்.

டொனால்ட் ட்ரம்ப் மீண்டும் அமெரிக்க ஜனாதிபதியாக பதவியேற்றதன் பின்னர் இருவரும் சந்தித்த முதல் சந்தர்ப்பம் இதுவாகும்.

ஊடக சந்திப்பிற்கு முன்பு ஓவல் அலுவலகத்தில் இரண்டு நாட்டு தலைவர்களும் கலந்துரையாடியுள்ளனர்.

ட்ரம்பின் முதல் பதவிக்காலத்தைவிட இம்முறை இரு மடங்காக இருநாடுகளும் ஒன்றிணைந்து செயற்படும் என நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இந்த சந்திப்பின் போது தொழிலதிபர் ஈலோன் மஸ்க், அமெரிக்க இராஜாங்க செயலாளர் உள்ளிட்டோரும் பங்கேற்றுள்ளனர்.

இந்தக் கலந்துரையாடல்களை தொடர்ந்து ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பும், பிரதமர் நரேந்திர மோடியும் ஊடக சந்திப்பில் பங்கேற்றனர்.

ஊடக சந்திப்பில், வரிவிதிப்பு மும்பை தாக்குதல் குற்றவாளி தஹாவூர் ராணாவை நாடு கடத்துதல், சட்டவிரோத குடியேற்றம் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் இரு நாட்டு தலைவர்களால் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

இந்தியா நடுநிலையாக இன்றி அமைதியின் பக்கம் நிற்பதாக மோடி தெரிவித்துள்ளார்.

யுக்ரேன் – ரஷ்ய யுத்தத்தில் இந்தியாவின் நிலைப்பாடு தொடர்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதில் வழங்கும் போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

மும்பை தாக்குதல் குற்றவாளியான தஹாவூர் ராணாவை இந்தியாவிற்கு நாடு கடத்துவதற்கும் டொனால்ட் ட்ரம்ப் இதன்போது இணக்கம் தெரிவித்துள்ளார்.

இந்த சந்திப்பின் போது இந்தியாவிற்கு வருகை தருமாறு அமெரிக்க ஜனாதிபதிக்கு பிரதமர் மோடி அழைப்பு விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, அமெரிக்காவிடமிருந்து மேலும் எண்ணெய் மற்றும் எரிவாயுவை கொள்வனவு செய்வதற்கு இந்தியா இணக்கம் தெரிவித்துள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி கூறினார்.

பிரதமர் நரேந்திர மோடி சிறந்த தலைவர் என வர்ணித்துள்ள அமெரிக்க ஜனாதிபதி அவரின் செயல்கள் தொடர்பில் அனைவரும் பாராட்டு தெரிவிப்பதாகவும் குறிப்பிட்டார்.

அத்துடன், இந்தியாவிற்கான இராணுவ தளபாட விற்பனையை மில்லியன் கணக்கான டொலர்களால் அதிகரிக்க அமெரிக்கா திட்டமிட்டுள்ளதாகவும் அமெரிக்க ஜனாதிபதி கூறியுள்ளார்.

## பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ் வைத்தியசாலையில் சேர்ப்பு



பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ் உடல்நலக் குறைவு காரணமாக ரோமில் உள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

88 வயதான பாப்பரசர் ஏற்கனவே வயிற்றுப் பகுதியில் பல அறுவை சிகிச்சைகளை மேற்கொண்டுள்ளார் என வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

பாப்பரசர் பல ஆண்டுகளாகச் சுவாசக் கோளாறு காரணமாகச் சிகிச்சை பெற்று வந்துள்ளார் எனவும் கூறப்படுகிறது.

பரிசுத்த பாப்பரசர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதால், அடுத்த 3 நாள்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்ட அனைத்து கூட்டங்களும் இரத்து செய்யப்பட்டுள்ளன.



## போரால் கொங்கோவிலிருந்து வெளியேறும் மக்கள் அதிகரிப்பு

கிழக்கு கொங்கோ குடியரசில் தற்போது இடம்பெற்று வரும் போர் காரணமாக இதுவரை 3 லட்சத்து 50 ஆயிரம் பேர் தங்களது இருப்பிடங்களை இழந்துள்ளனர் என ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகள் பிரிவு தெரிவித்துள்ளது.

அங்கிருந்து வெளியேறுபவர்களின் எண்ணிக்கை தொடர்ந்தும் அதிகரித்து வருவதாகவும் ஐக்கிய நாடுகள் சபை குறிப்பிட்டுள்ளது.

கிழக்கு கொங்கோ குடியரசைச் சுற்றியுள்ள யூஜின் மற்றும் கோமா ஆகிய பகுதிகளில் உள்ள 70 ஆயிரத்துக்கும் அதிகமான தற்காலிக கூடாரங்கள் அழிக்கப்பட்டுள்ளன என சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

அத்துடன், கோமா பகுதியில் உள்ள முகாம்களில் சுமார் 70 சதவீதமானவை அழிக்கப்பட்டுள்ளன என சர்வதேச ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன.

தற்போது, லட்சக்கணக்கான மக்கள் மருத்துவமனைகள் மற்றும் மதஸ்தலங்களில் வசித்து வருகின்றனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 15.02.2025




இன்று சில அசௌகரியங்களை சந்திக்க நேரும். முக்கியமான முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும். திட்டமிட்டு செயலாற்றினால் நல்ல விளைவுகளை எதிர்பார்க்கலாம்.

இன்று பணிச்சுமைக்கு ஆளாகலாம். கொடுக்கப்பட்ட பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பது சாத்தியமில்லை.

குடும்ப பிரச்சினை காரணமாக உங்கள் துணையுடன் சண்டை ஏற்படும். தவறான புரிந்துணர்வு ஏற்படும் நல்லிணக்கத்தை பராமரிக்க தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இன்று வீணான செலவுகள் செய்ய நேரிடும். உங்கள் தேவைகளை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

உங்கள் கண்களில் எரிச்சல் ஏற்படலாம். கண்களுக்கு தக்க மருந்துகள் பயன்படுத்தி கவனமாக பாதுகாக்க வேண்டும்.




இன்று புத்திசாலித்தனமாக திட்டமிடவேண்டியது அவசியம். சில சமயங்களில் பொறுமை இழந்து காணப்படுவீர்கள். என்றாலும் அமைதியான சாந்தமான அணுகுமுறை உங்களுக்கு தேவை.

கொடுக்கப்பட்ட பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க முடியாது. இது உங்களுக்கு கவலையை அளிக்கும். முறையாக திட்டமிட்டால் சிறப்பாக செயலாற்ற முடியும்.

உங்கள் துணையுடன் அதிகமாக உணர்ச்சிவசப்படுவீர்கள். நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்த உணர்ச்சி வசப்படுதலை தவிர்க்க வேண்டும்.

கடன் வாங்க நேரலாம். அதிக செலவினங்களால் கடன் வாங்க நேரிடும்.

உங்கள் தாயாருக்கு ஒவ்வாமை ஏற்படும். அதன் காரணமாக நீங்கள் பணம் செலவு செய்ய நேரிடலாம்.




இன்று கவலையுடன் காணப்படுவீர்கள். என்றாலும் பிரார்த்தனை, மந்திர ஜபம் போன்ற பக்தியான விஷயங்களில் ஈடுபடுவது அமைதியையும் ஆறதலையும் கொடுக்கும்.

இன்று பணிச்சுமை காணப்படும். முறையான திட்டமிடல் மூலம் இன்று நீங்கள் நற்பலன்களைப் பெறலாம்.

காரணமின்றி உங்கள் துணையிடம் குற்றம் கண்டுபிடிப்பீர்கள். நல்ல புரிந்துணர்வு ஏற்படுத்த இத்தகைய நடத்தையை தவிர்க்க வேண்டும்.

பணப்புழக்கம் மகிழ்ச்சிகரமாக இருக்காது. உங்கள் தேவைகளை சமாளிப்பதையே கடினமாக உணர்வீர்கள்.

பல்வலி உபாதைக்கான வாய்ப்பு உள்ளது. உணவில் கவனம் தேவை. இனிப்புப் பதார்த்தங்களை தவிர்க்க வேண்டும்.




இன்றையநாள் மகிழ்ச்சிகரமானதாக இருக்கும். உங்களிடம் காணப்படும் உறுதி வெற்றியை பெற்றுத்தரும். மனதில் நம்பிக்கை நிறைந்து இருப்பதன் காரணமாக விரைந்து முடிவெடுப்பீர்கள்.

உங்கள் பணியில் மகிழ்ச்சியும் திருப்தியும் காணப்படும். உங்கள் சகபணியாளர்களுடன் நல்லுறவு காணப்படும். அலுவலகத்தில் நடக்கும் மகிழ்ச்சியான நிகழ்வுகளில் கலந்து கொள்வீர்கள்.

வீட்டில் நடக்கவிருக்கும் ஒரு விசேஷம் பற்றி உங்கள் துணையிடம் கலந்தாலோசிப்பீர்கள். இது நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்த உதவும்.

பணப்புழக்கம் சிறப்பாக இருக்கும். உங்கள் சேமிப்பு உயரும். உங்களுக்கு பிரியமானவரின் விசேஷத்துக்காக நீங்கள் செலவுகளைச் செய்ய நேரலாம்.




இன்று புதிய வாய்ப்புகள் உங்களைத் தேடிவரும். நம்பிக்கையுடன் முயன்றால் நல்ல பலன்கள் கிடைக்கும். ஆழ்ந்த திருப்தியை உணர்வீர்கள்.

உங்கள் பணிகளை நேர்மையான முயற்சியுடனும் அர்ப்பணிப்புடனும் செய்வீர்கள். சிக்கலான பணிகளையும் சாதாரணமாக செய்து வெற்றி பெறுவீர்கள்.

அலுவலக பயணம் சம்பந்தமாக உங்கள் துணையுடன் கலந்தாலோசிப்பீர்கள். இருவரும் நல்ல தருணங்களை உங்களுக்குள் பகிர்ந்து கொள்ள இத்தகைய பயணங்கள் உதவிகரமாக இருக்கும்.

கணிசமான தொகை கிடைக்கும். குடும்பத்திற்கான பயனுள்ள விஷயங்களுக்கு பணத்தை செலவு செய்வீர்கள்.

இன்று ஆரோக்கியமாக இருப்பீர்கள்.




உங்கள் வளர்ச்சி குறித்த கவலை இன்று காணப்படும். தடைகளை எதிர்கொள்வது கடினமாக உணர்வீர்கள். எச்சரிக்கையான அணுகுமுறை தேவை. இன்று நீங்கள் தவறுகள் செய்ய வாய்ப்பு உள்ளது.

சகபணியாளர்களுடன் நல்லுறவு காணப்படாது. பொறுமையுடன் சிறப்பாக கையாண்டால் சூழ்நிலையை சமாளிக்கலாம்.

உங்கள் துணையுடன் உங்கள் மனதில் உள்ள பிரச்சினைகளை வெளிப்படையாகப் பேசுவது நல்லது. இது உங்கள் பிரச்சினைகளை தீர்க்க உதவும்.

செலவினங்கள் அதிகமாக காணப்படுகின்றன. கையிலிருக்கும் குறைந்த பணத்தைக் கொண்டு சேமிப்பதென்பது கடினமாக இருக்கும்.

உங்கள் தந்தையின் சிறியதொரு உடல்நிலை பாதிப்புக்காக பணத்தை செலவு செய்வீர்கள்.




இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக இல்லை. அன்றாட அலுவல்களை கவனமுடன் செய்ய வேண்டும். பேசுவதற்கு முன் யோசித்து பேச வேண்டும். பிரார்த்தனை உங்களுக்கு ஆறுதல் அளிக்கும்.

இன்று பணிச் சூழல் சாதகமாக காணப்படும். உங்கள் கடின முயற்சி மூலம் வெற்றி பெறுவீர்கள். உங்களுக்கு கொடுக்கப்பட்ட கடினமான பணிகளை எளிதாக கையாள்வீர்கள்.

உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை கொள்வது நல்லது. உணர்ச்சிவசப்படுதலை தவிர்த்து சமநிலையான அணுகுமுறையை பராமரிப்பதன் மூலம் நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்தலாம்.

பணவரவு குறைந்து காணப்படும். உங்களுக்கு பிரியமான ஒருவரின் உடல்நலத்துக்காக ஏற்படும் திடீர் செலவு உங்களுக்கு கவலையை அளிக்கும்.




இன்று நற்பலன்கள் ஏற்படும். உங்கள் முயற்சிகள் நல்லபலனையும் திருப்தியையும் ஏற்படுத்தும். உங்கள் நண்பர்களின் ஆதரவைப் பெறுவீர்கள்.

உங்கள் பலவீனங்களை அறிந்து பணியாற்றினால் உங்கள் செயல திறன் மேம்படும். பணியில் உங்கள் நேர்மை உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.

மகிழ்ச்சியுடன் பேசுவதன் மூலம் உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்திக் கொள்ளலாம்.

தொலைதூரத்திலிருந்து வரவேண்டிய நீண்ட கால நிலுவைப் பணம் வந்து சேரும். வங்கியிருப்பு அதிகரிக்க அது உதவும்.

இன்று ஆரோக்கியம் நன்றாக இருக்கும். நீங்கள் ஆற்றலுடனும் துடிப்புடனும் காணப்படுவீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 15.02.2025




கடினமான முயற்சிகள் செய்தால் இன்றைய நாளை நல்ல முறையில் அமைத்துக் கொள்ளலாம். உங்கள் திறமைகளை மேம்படுத்த இந்த நாளை பயன்படுத்துங்கள்.

உங்களுக்கு கொடுக்கப்பட்ட பணி களில் பொறுமையுடன் செயலாற்ற வேண்டும். பணிச் சுமை காரணமாக குறித்த நேரத்தில் கொடுக்கப்பட்ட பணிகளை முடிக்க முடியாது.

குடும்பத்தின் மீது அக்கறைகாட்டி உங்கள் துணை யுடன் அதைப்பற்றி ஆலோசனை செய்வதன் மூலம் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று கையிலிருக்கும் பணம் போதுமானதாகவும் திருப்தி அளிப்பதாகவும் இருக்கும்.உங்கள் கடின உழைப்புக்காக ஊக்கத்தொகை பெறுவீர்கள்.

இன்று நல்ல ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.




இன்று குடும்ப பிரச்சினைகளை சமாளிக்க வேண்டியிருக்கும். இந்தப் பிரச்சினைகளை சுமுகமாக தீர்ப்பதற்கு பெரியவர்களின் ஆலோசனையைப்பெற வேண்டும்.

உங்களுக்கு கொடுக்கப்பட்ட பணி களை குறித்த நேரத்துக்குள் முடிப்பீர்கள். உங்கள் செயல்திறன் உங்கள் சகபணியாளர்களின் செயல் திறனை மிஞ்சியதாக இருக்கும்.

குழப்பமான எண்ணங்கள் காரணமாக உங்கள் துணையு டன் வாக்குவாதத்தில் ஈடுபடுவீர்கள். நல்லிணக்கத்தை பராமரிக்க அத்தகைய நடத்தையை தவிர்த்திடுங்கள்.

பண இழப்புகள் காணப்படுகின்றன. நிதிலையை கவனமான முறையில் கையாள வேண்டும்.

கால்வலி ஏற்படலாம். தியானம் மேற்கொள்வதன் மூலம் மனஅழுத்தத்தை குறைக்கலாம்.




இன்று உங்கள் இலக்குகளை அடைய கடின முயற்சி செய்ய வேண்டி யது அவசியம்.உங்கள் மீது நம்பிக்கை வைத்து முயன்றால் நல்ல விளைவுகள் ஏற்படும்.

இன்றைய பணிகள் சற்று சவாலா–னதாக இருக்கும். பணிச்சுமை காரணமாக பணிகளில் தவறுகள் நேரலாம்.

பாதுகாப்பற்ற உணர்வு அதிகமாக காணப்படும். இது உங்கள் துணையுடனான உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும்.

வீட்டில் இருக்கும்பெரியவர்களின் உடல் நலனிற் காக செலவுகள் செய்ய நேரலாம். அதனால் உங்கள் செலவினங்கள்அதிகமாக இருக்கும். சேமிக்க இயலாது.

குழப்பமான எண்ணங்கள் காரணமாக உங்கள் உடல்நிலை ஆரோக்கியமாக இருக்காது.




இன்று அதிர்ஷ்டம் உங்கள் பக்கம் இருக்கும். இன்று முயற்சியே இல்லாமல் கடினமான பணிகளை செய்து முடிப் பீர்கள். முக்கியமான முடிவுகளை இன்று எடுக்கலாம்.

இன்று பணிச்சுமை அதிகமாக காணப்படும். திறமையாக பணியாற்ற பயனுள்ள கால அட்டவணையை அமைத்து செயல்படுவது சிறந்தது.

உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்குச் செல் வதன் மூலம் மகிழ்ச்சியை பராமரிக்க முடியும்.

பணவரவு மகிழ்ச்சியை அளிக்கும். சேமிப்பதற்கான வாய்ப்பு அதிகமாக உள்ளது.

இன்று மிகுந்த ஆற்றலுடன் காணப்படுவீர்கள். உங்கள் நேர்மறையான மனநிலை உங்கள் ஆரோக்கியத்தில் பிரதிபலிக்கும்.



# மூதூரில் நேற்று மக்கள் ஆர்ப்பாட்டம் மண் அகழ்வை அனுமதிக்குமாறு கோரி

(எச்.எம்.ஹலால்தீன்)

மூதூர் பிரதேச செயலாளர்கள் பிரிவுக்கு உட்பட்ட இறால் குழி பிர தேசத்தில் ஆர்ப்பாட்டம் ஒன்று மேற் கொள்ளப்பட்டுள்ளது.

திருகோணமலை – மட்டக்களப்பு பிர தான வீதியின் அருகாமையில், இறால் குழி பிரதேச மக்களால் இவ்வாறு ஆ ர்ப்பாட்டம் நேற்று மாலை 5.39 மணி அளவில் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இப்பிரதேச மக்களின் பிரதான தொழில் மண் அகழ்வதாகும். தற் பொழுது இந்த மண் அகழ்வு இடை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

இதனால் இறால் குழி பிரதேச மக்க ளின் வாழ்வாதாரம் முற்று முழுதாகப் பாதிக்கப்பட்டது.

இத்தொழிலை மீண்டும் அனும திக்க கோரியே இந்த ஆர்ப்பாட்டம் மேற் கொள்ளப்பட்டுள்ளது.

ஆர்ப்பாட்டத்தில் சுமார் 60க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர்.



